**DEPOSITION OF WITNESS.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR**

**S.C. No. 119/2025**

**PROSECUTION WITNESS No - 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **கணபதி** | **Caste** | : |
| **Father/ Husband Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of January 2026. .**

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை :**

நான் புதுக்கோட்டையில் குடியிருந்து கொண்டு புதுக்கோட்டை போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக கடந்த 11 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.11.2024 ஆம் தேதியன்று புதுக்கோட்டையில் மதியம் 12.00 மணிக்கு அரசு போக்குவரத்து வாகனம் பதிவு எண். TN-55-N-1098 என்ற வாகனத்தில் புதுக்கோட்டையிலிருந்து கோயமுத்தூர் செல்லும் ஓட்டுநராக பணிபுரிந்தேன். மதியம் 12.30 மணிக்கு புதுக்கோட்டையில் எடுத்த பேருந்தை கரூர் திருமாநிலையூர் ரவுண்டானாவில் வந்துகொண்டிருந்த போது மதியம் 3.00 மணிக்கு ஆஜர் எதிரி பெரிய கல் கொண்டு பேருந்தின் முன்பக்க கண்ணாடியில் கல் எரிந்தார். அதனால் பேருந்தின் முன் கண்ணாடி உடைந்தது. பேருந்தை நிறுத்தி நானும் நடத்துநர் வெங்கடேசனும் ஆஜர் எதிரியை துரத்தி பிடித்து அவரை காவல்நிலையத்திற்கு கொண்டு சென்று

ஒப்படைத்தோம். ஆஜர் எதிரி என்னை பார்த்து "தேவுடியா பயலே" என்று திட்டினார். பின்னர் ஆஜர் எதிரியை நானும் நடத்துநர் வெங்கடேசனும் பிடித்து பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம். நீதிமன்றத்தில் உள்ள கல்லைக்கொண்டுதான் ஆஜர் எதிரி பேருந்தை தாக்கி கண்ணாடியை உடைத்தார். அன்று பேருந்தில் 65 பயணிகள் இருந்தார்கள். **நான் காவல்நிலையத்தில் நடந்த விபரத்தை பற்றி கூறி எழுத்துப்பூர்வமான புகார் எழுதி கொடுத்து அதில் கையெழுத்து செய்தேன். அந்த புகார் இதுதான் அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதிலுள்ள என் கையெழுத்து இதுதான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரி பேருந்தின் மீது எரிந்த கல் இதுதான். அது அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல்நிலையம் சென்ற போது தான் ஆஜர் எதிரி பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்துகொண்டேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.27 19:25:20 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR**

**S.C. No. 119/2025**

**PROSECUTION WITNESS No - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **வெங்கடேசன்** | **Caste** | : | |
| **Father/ Husband Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of January 2026. .**

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். )**

**முதல் விசாரணை :**

நான் புதுக்கோட்டை மாவட்டத்தில் பெருங்கழுரில் குடியிருந்து கொண்டு புதுக்கோட்டை போக்குவரத்து கழகத்தில் நடத்துநராக கடந்த 11 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.11.2024 ஆம் தேதியன்று புதுக்கோட்டையில் மதியம் 12.00 மணிக்கு அரசு போக்குவரத்து வாகனம் பதிவு எண்.TN-55-N-1098 என்ற வாகனத்தில் புதுக்கோட்டையிலிருந்து கோயமுத்தூர் செல்லும் நடத்துநராக பணிபுரிந்தேன். மதியம் 12.30 மணிக்கு புதுக்கோட்டையிலிருந்து கிளம்பி கரூர் திருமாநிலையூர் ரவுண்டானாவில் வந்துகொண்டிருந்த போது மதியம் 3.00 மணிக்கு ஆஜர் எதிரி பெரிய கல் கொண்டு பேருந்தின் முன்பக்க கண்ணாடியில் கல் எரிந்தார். அதனால் பேருந்தின் முன் கண்ணாடி உடைந்தது. ஓட்டுநர் பேருந்தை நிறுத்தி ஓட்டுநர் கணபதியும் நானும் ஆஜர் எதிரியை துரத்தி பிடித்து அவரை

காவல்நிலையத்திற்கு கொண்டு சென்று ஒப்படைத்தோம். ஆஜர் எதிரி ஓட்டுநரைப்பார்த்து "தேவுடியா பயலே" என்று திட்டினார். காவல்நிலையம் சென்ற போது தான் ஆஜர் எதிரி பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்துகொண்டேன். நீதிமன்றத்தில் உள்ள கல்லைக்கொண்டு தான் ஆஜர் எதிரி பேருந்தில் அடித்தார். அது ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.27 19:25:26 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR**

**S.C. No. 119/2025**

**PROSECUTION WITNESS No - 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **வெற்றிவேல்** | **Caste** | : | |
| **Father/ Husband Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of January 2026. .**

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். )**

**முதல் விசாரணை :**

நான் பல்லடம் மகாலட்சுமி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் லாரி ஓட்டுநராக பல்லடத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் திருச்சியிலிருந்து பல்லடத்திற்கு அரசுப்பேருந்தில் கடந்த 01.11.2024 ஆம் தேதியன்று மாலை 03.00 மணியளவில் பேருந்தில் பயணம் செய்தபோது ஆஜர் எதிரி முன்பக்க கண்ணாடியை கல்லால் பேருந்தின் கண்ணாடியை உடைத்தார். கண்டக்டர் மற்றும் டிரைவர் ஆஜர் எதிரியை பிடித்து பசுபதிபாளையம் காவல்நிலைத்தில் கொண்டு சென்று ஒப்படைத்தார்கள். நான் பயணம் செய்த பேருந்தின் பதிவு எண். 1098 ஆகும். ஆஜர் எதிரி கல்லைக்கொண்டு எரிந்தார் எந்த கல் என்று எனக்கு அடையாளம் தெரியாது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.27 19:25:32 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR

## S.C. No. 119/2025

## PROSECUTION WITNESS No - 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **வரதராஜன்** | **Caste** | : | |
| **Father/ Husband Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of January 2026. .**

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். )**

**முதல் விசாரணை :**

நான் திண்டுக்கல்லில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோமொபைல் இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன். நான் திண்டுக்கல் அரசு பணிமனையில் தானியங்கு பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். பசுபதிபாளையம் காவல்நிலைய குற்ற எண்.399/2024 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட அரசு போக்குவரத்து கழகத்தின் பேருந்தின் பதிவு எண். TN-55-N-1098 என்ற வாகனத்தின் முன் கண்ணாடி உடைந்திருந்தது. மேற்சொன்ன பேருந்தின் உடைந்த முன் கண்ணாடி மற்றும் ரப்பர் பீடிங், பேஸ்ட், லேபர் அனைத்தும் சேர்த்து மொத்தமாக ரூ.25000/- ஆகும் என்று நான் மதிப்பீடு செய்து அறிக்கை அளித்துள்ளேன். **அந்த அறிக்கை இதுதான். அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகறிது**. அதனை மாற்றுவதற்கான மொத்த செலவு ரூ.25,000/-. பசுபதிபாளையம் காவல்நிலைய ஆய்வாளர்

கேட்டுக்கொண்டதற்கிணங்க அ.சா.ஆ.3 அறிக்கையை வழங்கினேன். காவல்துறையினர் என்னை இது சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.27 19:25:37 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.